வேகங்களை கெடுத்து இறைவன் அருள்புரிகிறான்; இந்த அருளைச் செய்வது அவனுடைய கருணையே ஆகும்; அந்தக் க்ருணையின் சின்னமே திருவடி; வேகத்தைக் கெடுக்கின்ற இந்த அருட் செயலிலே, அந்தத் திருவடி வெற்றி பெறுமாக!" என்பது மரபுவழிப் பொருளாகும்.

இதற்கு உரை கூறுகிற ஞானியர்கள், வேகம் என்பதை மனத்தின் கீழ்நோக்கிச் செல்லும் விரைவு என்று பொருள் கொள்வர். காமமாதி மும்மலமும், அபக்குவிகளிடம் வேகத்தோடு தொழிற்படுவது கண்கூடு. இந்த வேகம் கெடுவதற்குரிய வழியே, மனமானது சிற்றம்பலமாகிய சிதாகாயப் பெருவெளியில் ஒன்றி நின்று, சிவ ஒளியிலே பூரிப்பதாகும். இப்படிப் பூரிக்கின்ற பக்குவனுக்கு, உள்ளமானது சிவத்தோடு பொருந்தித் துரியமாகிய உயர்களத்திலே இயங்குவதனால், மலவேகங்கள் கெட்டழிகின்றன. இந்த மலநீக்கத்திற்கு உறுதுணையாக அமைவது, உள்ளமாகிய பெருங்கோயிலிலே ஆன்ம வழிபாட்டின் முறையிலே யோகியர்கள் செய்கின்ற திருவடிப் பூசனையாகிய ஒளிவழிபாடு. திருவடியாகிய ஒளி, மும்மலமாகிய இருளை கெடுத்துப் பேரின்பப் பெருவாழ்வை நல்குகிறது. இதுவே வேகங் கெடுத்தாளும் திருவடியின் தொழில். இந்தத் தொழிலிலே அந்தத் திருவடி எத்துணைக்கு வெற்றி பெறுகிறதோ, அத்துணைக்கு ஞானக்கல்வி பயிலும் மாணவன் கடைத்தேறுகிறான். எனவே அந்தத் திருவடி வெல்க என்றார்.

இனி, அடுத்த வரி,

பிறப்பறுக்கும் பஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க

பிஞ்ஞகன் என்பதற்குத் தலைக்கோலத்தை உடையவன் என்பது சொற்பொருளாகும். பெய்கழல்கள் என்பதற்கு, அருளைப் பொழிகின்ற திருவடிகள் என்ற பொருளோடு மரபுவழி உரை அமைகிறது.

இந்த வரிக்கு உரை கூறுகிற சிவயோகியார் ஒரு நீண்ட விளக்கத்தை மேற்கோள்களுடன் கூறுகிறார். அது வருமாறு:

"பிஞ்ஞகம் - தலைக்கோளம்: பிஞ்ஞகன் - தலைக்கோலத்தை உடையவன். சீவர்களது சிரசின் மேலுள்ள சிதாகாயத்தில், தன்னை இருள் எனக் கண்டதே ஆன்மரூபம் என்று, சித்தாந்த சாத்திரம் கூறும். இந்த இருளை அகற்றச் சிவத்தின் ஒளி புகுவதை அருள் வீழ்ச்சி (சத்தி நிபாதம்) என்பர். இது யோகியின் சிரசை அழகு படுத்துவதாக உள்ளது. அதனால் சீவனின் பிறப்பறுகை அமைகிறது. அத்தகைய அருளைப் பெய்யும் பிஞ்ஞகனது திருவடி வெற்றி பெறுக.

இப்பொருளே ஞானதரி சனந்தான்என் றிங்கு
எக்கருவி யும் நீக்கி இலங்குயிரின் செயல்கள்
அப்பொருளன் யென்றேயா வையுங் கூ டாமல்
அவற்றை அகன் றவைவசமற் றவத்தையிற்கூ டாமல்

தப்பாமல் நெதிபண்ணத் தர்ப்பணத்தைத்
தான்விளங்க வருமொளிபோல் தலைப்படுமே ஞானம்
ஒப்பறவே இப்பொருளின் உறநிற்பை யாயின்
உன்செயலற் றொளிஞானம் உனைக்கவருங்காணே.
(தத்துவ பிரகாசம்)

தேகத்தைச் சூழ உள்ள ஆகாய வெளியே சீவனது வடிவாகும். இது கோடிக்கணக்கான ஒளி அணுக்களால் ஆயது. இவ்வணுக்கள் இருளாயிருப்பது அஞ்ஞானம். ஒளியாய் மாறுவதே ஞானம். இவ்வொளியுள் சிவமுமுள்ளது.

மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது ஆயிர மாயினால்
ஆவியின் கூறுநூ றாயிரத் தொன்றே -(திருமந்திரம்)

ஏனோர் பெருமைய னாயினும் எம்மிறை
ஊனே சிறுமையின் உட்கலந் தங்குளன்
வானோர் அறியு மளவல்லன் மாதேவன்
தானே யறியுந் தவத்தின் அளவே -(திருமந்திரம்)

இனி, அடுத்த அடி வருமாறு:

புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க —

இந்த வரிக்குப் பொருள் சொல்லும் சைவர்கள், புறத்தார்க்கு என்ற சொல்லுக்குப் புறச்சமயிகள் என்று பொருள் சொல்கிறார்கள். சைவமில்லாத பிற சமயிகளுக்குச் சிவன் சேயோனாக நிற்கிறான் என்பது வெளிப்படை. இதுவே மரபுவழிப் பொருள். ஆனால் யோகியரும் ஞானியரும் கூறுகிற பொருள் வேறு.

யோகியர்கள் புறத்தார் என்பதற்குப் பொருள் கூறும்போது, புற உலகிலே சிவனை வழிபடுகிறவர்கள் என்று உரைக்கிறார்கள். அதாவது சரியையிலும் கிரியையிலும் தோய்ந்த பக்தர்கள் என்பது பொருள்.

சரியை என்கிற தொண்டு நெறியிலே ஈடுபடுகிற மக்கள், சிவன் அமர்ந்துள்ள பற்பல தலங்களுக்குச் சென்று அவனை வழிபடுகிறார்கள். அவன் தங்களிடத்தே இருந்து நீண்ட தொலைவில் இருப்பதாக எண்ணி இத்தகைய தல யாத்திரைகளை இவர்கள் மேற்கொள்கிறார்கள். இவ்வகையிலே அவன் இவர்களுக்குத் தொலைவிலுள்ளவனாக, சேயோனாக விளங்குகிறான்.

கிரியை ஆகிய நன்மகவு நெறியிலே ஈடுபடுவோர்கள், எம்பெருமானுக்குப் பற்பல வடிவங்களைத் தந்து, பல்வகையான யந்திரங்கள் மந்திரங்கள், பூசனை முறைகள் கொண்டு வழிபாடு இயற்றுகிறார்கள். இவர்களுடைய சடங்குகளும் செய்முறைகளும் பற்பலவாக விரிவதால், இவர்களுக்கும் எம்பெருமான் சேயோனாகிறான்.

இந்த இருவகையான பொருள்கோளும் யோகியரும் ஞானியரும் விளக்குகிற முறையாகும்.

யோகியர்கள் இறைவனைச் சேய்மையாயிருக்கும் பொருளாகக் கருதாமல், உள்ளமாகிய பெருங்கோயிலிலே அமர்த்துவதால் அவன் அவர்களுக்கு அணியன் ஆகிறான். அவர்கள் கையாளுகிற யோகப் பயிற்சி முறைகளும், சேய்மைக்கண் சென்று நிகழ்த்துபவையாக இல்லாமல், அவரவர் உடம்புக்குள்ளேயே நிகழ்கின்றனவாக அமைவது இங்கே சிந்தித்தற்கு உரியது.

ஞானியர்கள் ஆன்ம வழிபாட்டிலோ என்றால், சீவனே சிவலிங்கமாக அமைவதோடல்லாமல், அவர்களுடைய தவம் முழுவதும், அறிவுக்கு அறிவான பேரறிவை அறிவுகொண்டு அருவ நிலையிலே இயற்றுகின்ற வழிபாடாகும். எனவே இங்கே பரம்பொருள் அண்மையிலும் அண்மையாகி விடுகிறது.

இந்த விளக்கத்தை மனத்திற்கொண்டு, சித்தர்களின் நோக்கிலே சேய்மையையும் அண்மையையும் பார்த்தோமானால், கீழ்க்கண்ட திருமந்திரப் பாடல் இனிது விளங்கும்:

கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுற மாமல ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி உணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே.

இனி, சிவபுராணத்தின் அடுத்த வரிக்கு வருவோம்.

கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க

இந்த வரிக்குப் பொருள் கொள்ளுகிற சமயவாதிகள், இரண்டு கைகளையும் குவித்து வணங்குகிற முறையைக் கூறுகிறார்கள். யோகியரும் ஞானியரும், கரம் என்பதை நாடிக்கும் மூச்சுக்குமாகக் கொண்டு, யோகப் பயிற்சியையும் ஞானப் பயிற்சியையும் விளக்குகிறார்கள்.

இனி, அடுத்த வரி.

சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க

சரியை கிரியை வழிகளிலே செல்வோர் சிரங்குவித்தல் என்பதற்கு, வழிபாட்டு முறையிலே உள்ள தலைவணக்கத்தைக் குறிப்பிடுகிறார்கள். யோகஞானப் பயிற்சிகளிலே ஈடுபடுவோரோ என்றால், சிவன்கண் உள்ள உயர்மண்டலத்திலே உள்ளம் ஒடுங்குதலாகிய மெய்வழிபாடு என்கிறார்கள்.

அருவ வழிபாட்டை இந்த வரிக்குப் பொருளாகக் கொள்ளுகிற பெரியோர்கள், சிரங்குவிதல் என்பதற்குச் சிந்தனையால் வழிபடுதல் என்று பொருள்கொண்டு, சிந்தனையால் தன்னை வழிபடுகின்ற தீவிரதரர்களுக்குச் சிவபெருமான், வருகையை ஒலியால் உணர்த்துகின்றான் என்று பொருள் கூறுகிறார்கள். இங்ஙனம் பொருள் கூறுவ

தற்குத் துணையாக சீர் என்ற சொல்லுக்கு ஒலி என்னும் பொருள் இருப்பதைச் சான்று கூறுவர். "சிரோன்" என்பதற்கு ஒலிக்குத் தலைவன் என்று பொருள்கொண்டு, இச்சொல் சதாசிவனைக் குறிப்பதாகச் சிவயோகியார் பொருள் கொள்கிறார். சப்தம் ஆகாய பூதத்தின் இயல்பாகலின், ஒலிக்குத் தலைவன் என்பதை நாதத்தின் அதிபதியாக சதாசிவன் என்பது, ஞானியர் சொல்லும் உரையாகும். 'சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி' ஏற்கனவே விநாயகர் அகவலில் நாம் பார்த்திருக்கிறோம். ஆன்ம வழிபாடு இயற்றும் சித்தர்களின் பூசனை முறையிலே, பரம்பொருளின் வரவு ஒலியோடு நிகழ்கிறது. இதனைச் சிவனுடைய கழல்களின் சிலம் பொலி என்று சித்தர் இலக்கியம் பேசுகிறது.

இனி, அடுத்த வரிக்கு வருவோம்.

ஈசனடி போற்றி எந்தை யடிபோற்றி

மரபுவழிச் சமயிகள் இந்த வரிக்குப் பொருள் கொள்ளும் பொழுது, ஈசனாகிய எந்தை என்று விளக்குவர். சித்தர்கள் ஈசன் எந்தையாவது புறப்பொருள் அகப்பொருளாகிற பரிணாம நிலையிலே என்பர்.

இனி, அடுத்த வரி,

தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி

தேசன் என்பதற்கு, ஒளி உள்ளவன் என்று பொருள் கூறுகிறது சமய உலகம், ஞானிகள் கூறுகிற விளக்கம், தேசன் என்பது பொதுத் தன்மையையும், சிவன் என்பது தனித்தன்மையையும் குறிப்பதாக வருகிறது.

உயிரினுடைய ஒளியானது நிலைபெறுவதற்காக, பரம்பொருள் ஒளி உயிர்கள் தோறும் கலந்துள்ளது. உயிரின் இருளைப் போக்கி, அதனை ஒளிமயமாக்குவது இந்தப் பொருளாகிய பேரொளியே ஆகும். அப்போது அந்தப் பொது ஒளியைத் தனி ஒளியாக வணங்கிப் போற்றுகிறோம். இதுவே இரண்டு பிரிவாகத் தேசனடி என்றும், சிவன் சேவடி என்றும் இரண்டாகப் பிரித்துக் கூறப்பட்டுள்ளது. அகண்டத்தில் பேரொளியாக விளங்குகிற பரம்பொருளே, உடம்புக்குள் உயிரொளியாகச் செயற்படுகிறது என்பது குறிப்பாகும்.

இனி, அடுத்த வரி.

நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி

பக்தர்கள் தங்கள் அன்புக்கும் வழிபாட்டிற்கும் உரிய மாசமற்ற இறைவனை இந்த வரி விளக்குவதாகப் பொருள் கூறுவர். ஞானியர்கள் இதே பொருளைக் கொண்டபோதிலும், ஒரு சிறு மாறுபாடு கூறுவர். அன்பினால் தோய்ந்து நம் அகத்திலே வதிந்த போதிலும், சிவனை மாசுகள் தீண்டுவதில்லை. அவன் நிமலனே! இதுவே ஞானச் செம்பொருள் ஆகும்.

திருவள்ளுவர் தம்முடைய அரிய குறல் ஒன்றிலே,

அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு

என்கிறார்.

எலும்புக் கூட்டுக்குள்ளே உயிர் புகுந்த வரலாறு அன்பின் வரலாறாகும். பிணம் மனிதனாகுவது இந்த அன்பின் இயக்கத்தினால்தான். உயிர் உடலோடு பொருந்துவது, இந்த அன்பின் பிணைப்பேயாகும். பேருயிராகிய பரம்பொருள். உயிருக்குயிராகப் புகுந்து தொழிற்படுவதும் இதே அன்பின் இயக்கம்தான். இதுதான் 'நேயத்தே நின்ற நிமலன்' நிலையாகும்.

இனி, அடுத்த வரி.

மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி

பிறவித் துன்பங்களைக் கடப்பதற்கு எம்பெருமானுடைய திருவடிகளே துணை என்பதே இந்த வரிக்குரிய சமயப் பொருள். இதற்கு யோகியர் கூறுகிற பொருள் "சிவ ஒளி கண்டு அதில் நிலை பெற்றவர்க்குத் தத்துவங்களின் செயல் விடுபடும்" என்பதாகும்.

இனி,

சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி

மரபுவழிப் பொருள் வெளிப்படையானது. திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள எம்பெருமானை வணங்குகிறேன் என்ற அளவில் இந்தப் பொருள் அமைகிறது.

இதற்குச் சிவயோகி இரத்தினசபாபதியார் பல சித்தர்களின் தத்துவங்களை உள்ளடக்கிய முறையிலே மிக நீண்டதொரு விளக்கம் தருகிறார். திருப்பெருந்துறை என்பது மனித உடம்பிலுள்ள 'சகஸ்ரதளம்' என யோகியர் பொருள் கொள்வதால், இந்த நீண்ட விளக்கத்தைக் கீழே தருகிறேன். அது வருமாறு:

"சீர் - ஒலி; ஆர் - அகத்தில் உள்ள ஒளி. நாத மயமாகவும் தூல சூக்கும தேகங்களுக்கு ஒளியாகவும் விளங்கும், சிரசில் உள்ள சகஸ்ரதளத்தில் - உறையும் ஒளிவடிவான நம்முடைய சிவத்தின் திருவடியைப் போற்றுகின்றேன்.

விளக்கம் ஆத்ம தத்துவம் 24 - ம் தேகத்துடன் முடிவுறும். வித்தியா தத்துவம் ஒளியுடன் முடிவுறும். சிவதத்துவம் சமாதியுடன் முடிவுறும். அதனால் 36 தத்துவங்களும் பெருந்துறைச் சிவனிடம் லயமடையும்.

இக்கருத்தை நன்கறிந்துகொள்ளச் சித்தாந்த சாரம் என்ற ஒரு நூல் இங்கு ஆதாரமாகக் கீழே தரப்பட்டுள்ளது. சிவத்தைப் பெற சிவமுயற்சி வேண்டும். சிவமுயற்சி பூர்த்தியாகச் சிவத்தின் அருள் வேண்டும். இந்த இருநிலைகளும் அமையச் சைவ சமயம் பல

படிகளைக் கண்டு விளக்கியுள்ளது. இந்த நுட்ப விசாரணை சரியை கிரியை, யோக முயற்சிகளில் உள்ளவர்க்குத் தேவைப்படாத விஷயம். அவர்களுக்கு எடுத்துக் கூறினாலும் அறிந்துகொள்ளும் மனப்பக்குவமும் இல்லாதவர் ஆவர்.

1. பூதப்பழிப்பு
2. பொறியற நின்றுணர்தல்
3. அந்தக்கணர சுத்தி
4. கலாதிஞான நிராகரணம்
5. சுத்த தத்துவ தூடணம்
6. பிராணவாயு நீக்கம்
7. தத்துவ ரூபம்
8. தத்துவ தரிசனம்
9. தத்துவ சுத்தி
10. கேவலம்
11. கேவல தரிசனம்
12. கேவலாதீதம்
13. ஆன்ம ரூபம்
14. ஆன்ம தரிசனம்
15. ஞான தரிசனம்
16. ஞானாதீதம்
17. பரை தரிசனம்
18. பரை யோகம்
19. பரை போகம்
20. பரையில் அதீதம்
21. சிவ தரிசனம்
22. சாக்கிராதீதம்

சுத்தாவத்தை

23. சுகரூபம்
24. சுகாதீதம்
25. சிவப்பேறு
26. ஆன்ம சுத்தி
27. பரமானந்த தரிசனம்
28. பரமானந்த யோகம்
29. பரமானந்த போகம்
30. ஆன்ம லாபம், ஆனந்த மேலீடு

திருப்பெருந்துறை விஷயத்தை உணர்ந்துகொள்வதற்குச் சில பகுதிகள் கீழே கொடுக்கப்படுகின்றன.

என்றும் அருள் ஆன்மாவை நடத்தல் கேளாய்
இந்திரியங் களையும் அந்தக்கரணங்கள் தமையும்
நின்றறிய உயிருணர்த்த அறிந்து உடனாய் நிற்கும்
நெறிபோல வுயிர்ப்போதம் அறிவிக்க வறிதல்
அன்றியே சிவபோத மூடனாய்நின்ற உணர்தல்
ஆதலால் அருளன்றி நமக்கோர்செய லிலையாம்
இன்றளவும் நமதுதொழில் என்றதெல்லாம் அருளே
என்றுருகி அவ்வருளைப் பிரியாமல் இருநீ.

அறிவுபற்றி நீ யிருந்தால் விடியற் காலத்
தருணவுதயம் போலஅரவு கதிர்வி முங்கில்
பிறியுமா வொளிபோல மெல்ல மெல்லப்
பெருகுங்காண் மனக்கவலை அற்றுக் காண.

வுறுதிரோ தாயிமறைத் துனக்குக் காட்டும்
ஒளிஞானம் தரிசனமாம் அசபைவிந்து ஞானம்
பெறுமாதாரங்கள் பிராசாத வேதாக மங்கள்
பின்யோகத்தால் ஒளிகள் பெறின் பிறப்பாய் விடுமே.
உலவிய ஞானாதீதம் சிவஞா னத்தின்
உள்ளொ டுங்கிஅதன் வசமாய் உன்விவகாரம்
பலவுமற இருத்தலாம் பரைதரி சனங்கேள்
பகர்ஞானம் மிகுந்தத னுட்புக்க வொளியெங்கும்
நிலவியே பொதுவாக நிறைந்துசெழுங் கதிரோன்
நீடொளிஉச் சிக்காலத்து எங்குநிரந் தரமாய்க்
குலவுதல் போல்புரை யறநின்றி டுதலாகும்
கூறியஇப் பரைவியாத்தம் புகலக் கேளே.
சாற்றுபரை திரோதைமுதல் அனேகம் அருவுருவாஞ்
சத்திகளாய்ச் சிவனுக்கு வடிவமாகிக் கரணம
தேற்றுகுணம் இந்திரியத் தொழிலக ளாகிச்
சேர்ந்தாங்கோ பாங்கமாகி யிருப்பிடமாய்ப்
போற்றரிய சரீரிக் கிவ்வுலகமாய் அளிக்கும்
பொருளாகிப் பீடலிங்க மாதல்பரை வியாத்தம்
மாற்றரிய பரையில் உரையாது நெகிழாமல்
வசமாகத் தனைமறைய நிற்றல் பரையோகம்.
கண்டயோகப் பயனும் விளைந்த மணியோசை
கடலோசை யாழோசை செயகண்டி யோசை
வண்டோசை மதயானை பிளிறோசை நாத
வகையோசை கொம்போசை வந்து தோன்றில்
உண்டான பரையோகம்; பரையில் அதீதந்தான்
ஓசையெல்லாம் அழியஅதில் உருகியிருப் பதுவாம்
மண்டுசிவ தரிசனம்இக் கேடுபடா விமல
வளரொளிக்குள் ஒளியாகச் சிவத்தைக் காண்பதுவே.

இந்தத் தத்துவத்தை உலகினர் அறிந்து உய்யவே திருப்பெருந்துறை நிறுவப்பட்டுள்ளது. இதற்கு அத்தல விளக்கம் அறிதல் நலம் எனக் கருதி விளக்குகின்றேன். தலவிருக்ஷம் குருந்தமரம், குருந்து என்றால் காட்டு எலுமிச்சை, காட்டு நாரத்தை, குருந்து, குழந்தை என்ற பொருள்கள் உள்ளன. முதுகந்தண்டின் மேல் கோடிக்கு முகுளம் என்று பெயர். அதைப் பிடரிக்கண் என்று கூறுவர். அங்கிருந்தே அறிவுருவாக ஆன்மா ஐம்புலனறிவையும் அறிந்து கொள்ளுகிறது. இது குருத்து போன்ற பிரதேசத்தில் இருப்பதை உணர்த்த அந்தப் பெயருடைய ஒரு மரத்தைத் தலவிருக்ஷமாக்கி உள்ளனர்.

உருவம் பற்றாத அறிவொளியினால் வழிபாடு செய்யவேண்டும் என்றே சிவ பீடமும் சத்தி பீடமும் அமைத்துளனர். எவ்வித உருவமும் அங்கு வைக்கவில்லை. ஆகாயத்தினிடம் ஒரு சுகுகும ஓசை இயல்பாக உண்டு. கைலாயம் சென்றுவந்தவர்கள் அங்கு ஒரு மெல்லிய நாதம் இருப்பதைக் கூறுகின்றனர். மாணிக்கவாசகர்,

பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்
ஒலிதரு கையையுயர் கிழவோனே -(கீர்த்தித் திருவகவல்)

என்று பாடியுள்ளார்.

ஒளிவடிவமான சுழுமுனை நாடியிலே ஒலிக்கின்ற அடையாளமான சங்கொலி அல்லாமல், மற்ற வாத்திய ஓசைகள் ஒன்றும் திருப்பெருந்துறையில் கிடையாது. பரவெளியில் உமை காண நடிப்பதாக அவ்வூர்ப் புராணமும் கூறுகின்றது.

அண்டபிண்டம் என்று உலகத்திலே இரண்டு பொருள்கள் உண்டு. இவை இரண்டிலும் தத்துவங்கள் சமமாக விளங்கும். அண்டமாகிய இந்த உடம்பிலே, மூலாதாரத்திலிருந்து எழுந்த சுழுமுனை நாடி நிறைந்து மின்னல்போலப் பிரகாசிக்கிற ஒளியாகி, அந்த ஒளியிலே திருவைந்தெழுத்துக்களால் உணர்த்தப்படும் ஐந்துவகை ஒளிகளுள் ஒன்றிலொன்று அடங்குமுறையாலே முடிவிலே ஒன்றாக நிற்கக் குழலோசையாக நிற்கின்ற அவ்வோசை, தானும் அடங்கி நின்ற இடம் எதுவோ, அதுவே இறைவன் திருநடனம் செய்யும் சிதம்பரம் என்ற ஆகாயக் குறிப்புத் தலமாகும். அதுபோலவே திருப்பெருந்துறையும் ஆகாயக் குறிப்புத் தலமாகும். சிதம்பரம் உருவத்தால் உணர்த்தப்பட்டது. இது உருவமற்று உணர்த்தப்பட்டுள்ளது. யோகம் என்ற சொல் சேர்க்கை என்ற பொருளையுடையது. இங்க சீவனும் சிவனும் சேருவதை யோகமாக்கப்பட்டது. சீவன் சிற்றொளியுடன் கூடியது. இறைவன் பேரொளி. இரண்டும் ஒன்றாவதில் சிவயோகம். அவ்வொளி அணுக்களும் சிந்தனையால் அகண்டமும் அண்டமும் உரசுவதால் இந்த நாதம் இயல்பாக உண்டாகிறது. மற்ற ஓசை செய்கையினால் அமைவது பற்றி அதற்கு அநாகதம் என்று பெயர் வைத்துள்ளனர். ஆகதம் என்றால் அடித்தல். அன்+ஆகதம் = அடிக்காமல் எழுப்பும் ஓசை என்று பொருள். மனிதனின் தூல உடலில் ஒரு ஓசை இயல்பாக இருப்பதை அநாகதம் என்று புறநிலையில் உள்ளவர் கொண்டனர். யோகிகள், ஆகாயத்தினிடம் ஒரு நுண்ணோசை உள்ளது என்ற அறிவதில், ஆகாயபூத நாயகரான சதாசிவரை அறியலாம் என்று, தியானத்தில் நாதத்தை கண்டனர். இதுவேதான் தியானயோகம். இது எவ்வித மூச்சுப் பயிற்சியும் இல்லாதது என்பதை அறியவும். தியானம் என்ற தலைப்பில் திருமந்திரத்தில் உருவாய சத்தித் தியானம் என்றும், உருவமற்ற அருவத் தியானத்திற்குக் குரு மண்டலத்தியானம் என்றும் விளக்கியுள்ளார். இதை "பரத்தியான முன்னூல் குருவார் சிவத்தியானம் யோகத்தின் கூறே" என்றார்.

கண்ணாக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துட்
பண்ணாக்கி நின்ற பழம்பொருள் ஒன்றுண்டு
அண்ணாக்கின் உள்ளே அகண்ட ஒளிகாயட்டிப்
புண்ணாக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே.

ஒண்ணா நயனத்தில் உற்ற ஒளிதன்னைக்
கண்ணாரப் பார்த்துக் கலந்தங் கிருந்திடில்
விண்ணாறு வந்த வெளிகண் டிடவோடிப்
பண்ணாமல் நின்றது பார்க்கலு மாமே.

எண்ணாயிரத் தாண்டு யோகம் இருக்கினும்
கண்ணார் அமுதினைக் கண்டறி வாரில்லை
உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கினாற்
கண்ணாடி போலக் கலந்துநின் றானே.

நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை
ஓட்டமும் இல்லை உணர்வில்லை தானில்லை
தேட்டமும் இல்லை சிவனவ னாமே.

மணிகடல் யானை வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வுளையே ரிகையாழ்
தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்கவொண் ணாதே.

கடலொடு மேகங் களிறொடும் ஓசை
அடவெழும் வீணை அண்டரண் டத்துச்
சுடர்மன்னு வேணுச் சுரிசங்கின் ஓசை
திடமறி யோகிக்கல் லாற்றெரி யாதே.

இந்த நாதம் உண்டாவதற்கு நீண்ட காலச் சாதகம்தான் காரணம். காணாத திருவுருவுக்குத் திருவடி ஏது என்பர். அவனது ஒளிக்கிரணமும் அணுக்களின் உரசலில் உண்டாகும் நாதமும்தான் அவனது திருவடிகள். அத்தகைய ஒளியும் நாதமும்தான் காணப்படும் உலகத்தைப் படைப்பதும், கருதப்படும் சிந்தனையில் வெளிப்படுவதுமாகும். இந்தப் பூசை முறையை அறிவதில் உண்மை ஞானம் உள்ளது. திருமூலர் குருபூசை என்ற தலைப்புக் கொடுத்து விளக்கியுள்ளார்.

ஆகின்ற நந்தி யடித்தா மரை பற்றிப்
போகின் றுபதேசம் பூசிக்கும் பூசையும்
ஆகின்ற ஆதார மாறா றதனின்மேற்
போகின்ற பொற்பையும் போற்றுவன் யானே.

கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுறு மாமல ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி யுணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்குழல் சேர வொண்ணாதே.

மேவிய ஞானத்தின் மிக்கிடின் மெய்ப்பரன்
ஆவியின் ஞானநெறி நிற்றல் அருச்சனை
ஓவற வுட்பூச னைசெய்யில் உத்தமஞ்
சேவடி சேரல் செயலறல் தானே.

உச்சிருங் காலையும் மாலையும் ஈசனை
நச்சுமின் நச்சி நமவென்று நாமத்தை
விச்சுமின் விச்சி விரிசுடர் மூன்றினும்
நச்சுமின் பேர்நந்தி நாயக னாமே.

புண்ணிய மண்டலம் பூசைநூ றாகுமாம்
பண்ணிய மேனியும் பத்துநூ றாகமாம்
எண்ணிலிக் கையமிடிற் கோடி யாகிமாற்
பண்ணிடில் ஞானியன் பார்க்கில் விசேடமே

இந்துவும் பானுவும் இலங்குந் தலத்திடை
வந்தித்த தெல்லாம் அசுரர்க்கு வாரியாம்
இந்துவும் பானுவும் இலங்காத் தலத்திடை
வந்தித்தல் நந்திக்கு மாபூசை யாமே.

இந்துவும் பானுவு மென்றெழு கின்றதோர்
விந்துவும் நாதமு மாகிமீதா னத்தே
சிந்தனை சாக்கிரா தீதத்தே சென்றிட்டு
நந்தியைப் பூசிக்க நற்பூசை யாமே.

மனபவ னங்களை மூலத்தான் மாற்றி
அனித வுடற்பூத மாக்கி யகற்றிப்
புனிதன் அருள் தன்னிற் புக்கிருந் தின்பத்
தனியுறு பூசை சதாசிவற் காமே.

பகலும் இரவும் பயில்கின்ற பூசை
இயல்புடை யீசர்க் கிணைமல ராகப்
பகலும் இரவும் பயிலாத பூசை
சகலமுந் தான்கொள்வன் தாழ்சடை யோனே.

இராப்பகல் அற்ற இடத்தே யிருந்து
பராக் கறஆனந்தத் தேறல் பருகி
இராப்பக லற்ற இறையடி யின்பத்
திராப்பகல் மாயை இரண்டிடத் தேனே.

மூலாதாரத்தில் ஒளிகாணும்போது திருவாரூர் என்றும், இருதயத்தில் ஒளிகாணும்போது சிதம்பரம் என்றும், சிரசில் ஒளி காணும்போது திருப்பெருந்துறை என்றும் உருவகிக்கப்பட்டுள்ளது. இவை மூன்றும் உண்மையில் ஞானகுருவினிடம் சீடன் பெறும் மூன்று தீக்கையின் பரிபாஷைப் பெயராகும். இருதயம் சூரியன் ஒளியைக் கொண்டது. மூலாதாரம் அக்கினி கண்ட ஒளியையுடையது. சிரசு சந்திர கண்ட ஒளியையுடையது. இவ்வொளியே சிரசைக் கடந்தும் விளங்குவது. இவ்வறிவே சாக்கிராதீதம் சென்று மேல் உள்ள நிலைகளை அறிய உதவுவது. சித்தாந்தம் உணர்த்தும் 21 நிலை சிவதரிசனம் என்பதை இங்கு அறிந்துகொள்ளவும், நம்தேவன் என்ற சிவம் உலகில் வாழும் சகல மக்களுக்கும் உரிமையுடையவராவர்.

எல்லோரும் இறைஞ்சு தில்லை
அம்பலத்தே கண்டேனே -(கண்ட பத்து, திருவாசகம்)

இவ்வாறு நீண்ட விளக்கம் கூறி மூலதாரம் என்றும் திருவாரூரையும், இதயம் என்றும் சிதம்பரத்தையும், சிரசு என்னும் திருப்

பெருந்துறையையும் சித்தர்களின் தத்துவ முறையிலே ஞான நுட்பத்தோடு எத்துக் காட்டுகிறார் சிவயோகியார்.

இனி, சிவபுராணத்தின் அடுத்த அடிக்கு வருவோம்.

ஆராத இன்பம் அருளுமலை போற்றி

இந்த வரிக்கு எல்லையில்லாத இன்பம் தருகின்ற மலைபோன்ற எம்பெருமான் என்பதே மரபுப்பொருள். ஞானிகள் ஆராத அமுதம் என்பதற்குப் பருப்பொருள் இணைப்பு இல்லாத, நினைத்த உடனேயே பொங்கிப் பெருகுகிற அமுத உணர்வு என்று பொருள் கூறுகிறார்கள். கண்ணுக்குப் புலப்படும் பொருள்களில் மிகப் பெரியதாக உள்ள மலையை எல்லையற்ற பரம்பொருளுக்கு உருவ நிலையிலே ஓர் உவமையாகக் கூறுகிற தமிழ்மரபை ஒட்டி 'மலை' என்ற ஆட்சி இங்கு வந்திருக்கின்றது. இனி, இந்தச் சிவபுராணத்தின் ஆக்கச் செயலிலே விளைகிற அகஉணர்வுகளைச் சொல்லி நூலைத் தொடங்க முனைகிறார்.

சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்

இந்த வரிகளுக்கு மரபுவழி உரையிலும் ஞானியர் உரையிலும் அதிக வேறுபாடு காணப்படவில்லை. 'அவன் அருளால் அவன் தாள் வணங்குதல்' என்ற வரிக்குச் சமயிகள் கடவுளிடம் பக்தி கொள்வதற்கும் அவனுடைய திருவருளே தூண்டவேண்டியிருக்கிறது என்பர். குண்டலினியின் நாதனாக விளங்குபவன் சிவனே ஆதலாலும், சிவதத்துவம் ஒங்கி நிற்பதற்கு இந்தக் குண்டலினியே சிரசை அடைய வேண்டியிருப்பதாலும், 'அவனருளாலே அவன் தாள் வணங்குதல்' அமைகிறது என்கிறார்கள் ஞானிகள்.

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலாற் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

இந்த வரிகளின் பொருள் வெளிப்படையே. ஞானிகள் மட்டும் விண், மண் என்ற சொற்களுக்குச் சிறப்புப் பொருள் கூறுகிறார்கள். நம்முடைய தலைக்கு மேல் உள்ள நுண்வெளியிலும், தலைக்குக் கீழுள்ள உடம்பிலும் ஒரே ஒளியாய் விளங்குபவன் என்று பொருள் கூறுகிறார்கள். மண் என்றது பருவுடலையும் விண் என்றது நுண் உடலையும் குறிப்பிடுவதாகவும் சித்தர் மரபு கூறுகிறது.

இனி, மேலுள்ள வரிகள் உயிர் இனத்தின் வரலாற்றைக் கூறத் தொடங்குகின்றன.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லரசு ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்.

இந்த வரிகளின் பொருளுக்குள் புகுவதற்கு முன்பு, தமிழ் மக்களின் ஆழ்ந்து அகன்ற விஞ்ஞான அறிவை நாம் இங்கே நினைவு படுத்திக்கொள்ளல் அவசியமாகும்.

நிற்பனவும் நடப்பனவுமாகிய உயிரினங்களைப் பகுத்தறிவு கொண்டு விஞ்ஞான முறையிலே நன்கு ஆராய்ந்து கண்டவர்கள் தமிழர்கள். இன்றைய அறிவியலில் தாவர இயல், பறவை இயல், விலங்கியல், மனித இயல் என்று பற்பல பெயர்களிலே ஆங்கில நூல்களிலிருந்து கிடைக்கிற அறிவை நாம் குறிப்பிடுகிறோம். ஆனால், சித்தர் இலக்கியத்தின் பல துறைகளையும் பார்க்கும்பொழுது, இன்று நாம் கூறுகிற இத்தனை இயல்களிலும் நம் முன்னோர்கள் எத்துணை வல்லவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பது நம்மைப் பெருவியப்பில் ஆழ்த்துகிறது.

இந்த அறிவியல் கல்வியை நன்கு தேர்ந்த தமிழர்கள் இதையும் தாண்டிய உள இயலையும், உயிரியலையும், ஆன்ம இயலையும் எத்துணை ஆழ்ந்து கற்றுத் தேர்ந்துள்ளார்கள் என்பது மேலும் நம்மை மாபெரும் வியப்பில் ஆழ்த்துகிறது.

பரிணாம தத்துவம் என்று நாம் அழைக்கிற இவல்யூஷன் (Evolution) என்னும் ஆய்விலே சித்தர் இலக்கியம் தனிப்பெரும் இடம் வகிக்கிறது என்றால் புகழ்ச்சியில்லை.

சித்தர் இலக்கியத்தில் காணுகின்ற இத்தனை அறிவியலும் பொதுமக்களினமான தமிழ்ச் சமுதாயத்தில் பரவி வேரூன்றி, அதுவே நமது மொழியிலும், அன்றாடத் தமிழ் வழக்கிலும், நம்முடைய தமிழ் இலக்கணத்திலும் நிலைத்து நிற்கிறது.

உயிரின் பாகுபாடு சொல்கிற தொல்காப்பியம் மொழி இலக்கணமா, அல்லது அறிவியலைக் கூறும் விஞ்ஞான இலக்கியமா என்று நாம் வியக்கும் வகையிலே சூத்திரம் வகுக்கிறது. உயிர்களின் பாகுபாடு கீழ்கண்டவாறு தொல்காப்பியரால் வரையறை செய்யப்பெறுகிறது.

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதன் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே

உயிர்களின் வளர்ச்சி நிலையிலே அறிவு என்ற நுகர்ச்சி பொதுவானது. ஆனால், அது புகுகின்ற வாயில் அந்தந்த உயிருக்கு ஒன்றிலிருந்து ஆறுவரை விரிகிறது. எல்லாம் அறிவுதான். ஆனால், அந்த அறிவு உட்புகும் வாயில் மனிதனுக்கு ஐந்தும் ஒன்றுமாக ஆறாகிறது. தொட்டு அறிதல், சுவைத்து அறிதல், மணந்து அறிதல், கண்டு அறிதல், கேட்டு அறிதல் என்ற ஐம்புல அறிவுக்கும், ஐந்து வாசல்கள் உள்ளன. இவை புல்லிலிருந்து விலங்கு வரை உள்ள உயிர்களுக்கு உரிய வாயில்கள். மனிதனுக்கு அறிவை அறிவினால் அறியக்கூடிய ஒரு வாசல் இருக்கிறது. இது கண்ணுக்குப் புலப்படாத நுண்ணிய வாசல். மற்ற ஐந்தும் பருவுடலின் வாயில்கள். இந்த ஆறாவது வாயில் நுண் உடலின் நுட்பமான வாயில்.

தாவரங்கள் உற்றறிகின்ற வாயிலை மட்டும் கொண்டவை. அவை தொட்டறிவு என்கின்ற பரிசத்தினாலேயே ஐம்புல அறிவையும் துய்க்கின்றன. தொட்டால் சிலிர்த்தல், தண்ணீரைப் பருகுதல், உரத்தை உண்ணுதல், சைபர்நெட்டிக்ஸ் (Cybernetics) என்கிற அடையாள உணர்வு, இசைகேட்டுச் செழிக்கும் செவியுணர்வு, இத்தனைக்கும் தனித்தனியே புலன்கள் தாவரத்திற்கு இல்லாமல் உற்றறிவு ஒன்றன் துணைகொண்டே இத்தனையையும் அவை துய்க்கின்றன. பரிணாம வளர்ச்சியிலே இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்ற விரிவடைகின்ற அறிவுகள் அனைத்தும் இவ்வாறு ஒரு புலனை, ஒன்றுக்கு மேற்பட்ட புலன் நுகர்ச்சிக்குப் பயன்படுத்துகிற பான்மை கொண்டவை. சான்றாக, கண்ணும் செவியும் ஒன்றாய் இருப்பதால் பாம்பைக் கட்செவி என்கிறோம். இவ்வாறுதான் மற்றைய உயிர்களும். மனிதன் ஒருவனுக்கே விலங்குகளைப் போல ஐந்து பொறிகள் தனித்தனியே உள்ளதோடு, நுண் உணர்வுகளை நுண் உடலிலே துய்க்கக்கூடிய ஆறாவது வாயிலும் அமைந்துள்ளது. இந்த உண்மையை மனத்திற்கொண்டு தொல்காப்பியர் கூறுகிற பாகுபாட்டையும், மேற்கண்ட சூத்திரத்தையும் இனி வருகிற இப்பாகுபாட்டின் விரிவுச் சூத்திரங்களையும் நாம் காணவேண்டும்.

அவற்றுள் ஓரறிவுடையன

புல்லும் மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

ஈரறிவுடையன

நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

மூவறிவுடையன

சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

நாலறிவுடையன

நண்டும் தும்பியும் நான்கறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

ஐயறிவுடையன

மாவும் மாக்களும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

ஆறறிவுடையன

மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

இந்தச் சூத்திரங்களின் நுட்பம் என்னவென்றால், மனிதப் பிறப்புக்கு மட்டுமே ஆறாவது என்று எண்ணப்படுகிற மற்றொரு நுகர்ச்சி உள்ளது. ஐந்து புலன் அறிவுக்கும் மனம் இல்லாமல் முடியாது. தொட்டு அறிவது என்றாலும், தொடுவதை அறிவதற்கு மனம் வேண்டுமல்லவா! அவ்வாறே சுவையை அறிகின்ற உயிருக்கும் மனம் இல்லாவிட்டால் அந்தச் சுவையை எது அறிகிறது? மற்ற ஐம்புலனுக்கும் இதுவே பொருந்தும். ஆனால், நம் முன்னோர்கள், புலன் நுகர்ச்சியை அறிகின்ற ஆற்றலை மனம் என்று அழைக்கவில்லை. மனத்திற்கு உள்ளம் என்ற ஒரு சிறப்பைத் தந்து, ஐம்புல அறிவையும் தாண்டிய மற்றொரு நுண்ணிய அறிவையும் உணர்கின்ற ஆற்றல் பெற்ற ஆறாவது அறிவையே மனம் என்று அழைத்தார்கள்.

சித்தர்கள் மொழி வழக்கிலே மனம் என்பதற்குப் பற்பல பொருளமைதி இருப்பதால் ஏற்படும் குழப்பத்தை உணர்ந்த நிலையிலே, மனித மனத்தை, முக்கியமாக ஆறாவது அறிவைக் குறிப்பிடும் போதெல்லாம் அகஉணர்வு என்றும், உள்ளறிவு என்றும், தன்உணர்வு என்றும் அழைத்து, இந்த ஆற்றல்கள் அனைத்தும் அடங்கிய பேராற்றலை உள்ளம் என்றும் தங்கள் இலக்கியத்திலே பேசினார்கள். எனவே, அறிவு, ஐந்தறிவு, ஆறறிவு என்பதையும் மனம் என்ற சொல்லையும் ஒன்று சேர்த்துக் குழப்ப வேண்டியதில்லை. ஐம்புலன்கள் வாயிலாக அறிகிற அறிவு புல்லிலிருந்து விலங்குவரை எல்லா உயிர்களுக்கும் பொதுவானதே. ஆனால், ஐம்புலனுடைய உதவியும் இன்றி, இந்த ஐம்புலக் கதவுகளையும் தாழிட்டுவிட்டு, தனக்குள்ளே அறிகின்ற ஓரறிவு மனிதனுக்கே அவனுடைய பரிணாம வளர்ச்சியில் அமைந்திருப்பதால், அந்த ஆறாவது அறிவுக்கே மனம் என்ற சிறப்புப் பெயர் பொருந்தும். இந்த ஆற்றல் மனிதனுக்கே உரிய ஆற்றலாக இருப்பதனால்தான்,

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள

என்று சேக்கிழார் பெருமான் பாடியவாறு, ஐம்புல அறிவையும் ஒரே புலனின் வாயிலாகத் துய்க்கும் ஆற்றலும், ஐந்து புலனுமே இன்றி, ஆறாவதாகிய ஒரு நுண்புலன் வாயிலாக ஐந்தையும், ஐந்துக்கு

உயிர்களின் வளர்ச்சி நிலையிலே அறிவு என்ற நுகர்ச்சி பொதுவானது. ஆனால், அது புகுகின்ற வாயில் அந்தந்த உயிருக்கு ஒன்றிலிருந்து ஆறுவரை விரிகிறது. எல்லாம் அறிவுதான். ஆனால், அந்த அறிவு உட்புகும் வாயில் மனிதனுக்கு ஐந்தும் ஒன்றுமாக ஆறாகிறது. தொட்டு அறிதல், சுவைத்து அறிதல், மணந்து அறிதல், கண்டு அறிதல், கேட்டு அறிதல் என்ற ஐம்புல அறிவுக்கும், ஐந்து வாசல்கள் உள்ளன. இவை புல்லிலிருந்து விலங்கு வரை உள்ள உயிர்களுக்கு உரிய வாயில்கள். மனிதனுக்கு அறிவை அறிவினால் அறியக்கூடிய ஒரு வாசல் இருக்கிறது. இது கண்ணுக்குப் புலப்படாத நுண்ணிய வாசல். மற்ற ஐந்தும் பருவுடலின் வாயில்கள். இந்த ஆறாவது வாயில் நுண் உடலின் நுட்பமான வாயில்.

தாவரங்கள் உற்றறிகின்ற வாயிலை மட்டும் கொண்டவை. அவை தொட்டறிவு என்கின்ற பரிசத்தினாலேயே ஐம்புல அறிவையும் துய்க்கின்றன. தொட்டால் சிலிர்த்தல், தண்ணீரைப் பருகுதல், உரத்தை உண்ணுதல், சைபர்நெட்டிக்ஸ் (Cybernetics) என்கிற அடையாள உணர்வு, இசைகேட்டுச் செழிக்கும் செவியுணர்வு, இத்தனைக்கும் தனித்தனியே புலன்கள் தாவரத்திற்கு இல்லாமல் உற்றறிவு ஒன்றன் துணைகொண்டே இத்தனையையும் அவை துய்க்கின்றன. பரிணாம வளர்ச்சியிலே இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்ற விரிவடைகின்ற அறிவுகள் அனைத்தும் இவ்வாறு ஒரு புலனை, ஒன்றுக்கு மேற்பட்ட புலன் நுகர்ச்சிக்குப் பயன்படுத்துகிற பான்மை கொண்டவை. சான்றாக, கண்ணும் செவியும் ஒன்றாய் இருப்பதால் பாம்பைக் கட்செவி என்கிறோம். இவ்வாறுதான் மற்றைய உயிர்களும். மனிதன் ஒருவனுக்கே விலங்குகளைப் போல ஐந்து பொறிகள் தனித்தனியே உள்ளதோடு, நுண் உணர்வுகளை நுண் உடலிலே துய்க்கக்கூடிய ஆறாவது வாயிலும் அமைந்துள்ளது. இந்த உண்மையை மனத்திற்கொண்டு தொல்காப்பியர் கூறுகிற பாகுபாட்டையும், மேற்கண்ட சூத்திரத்தையும் இனி வருகிற இப்பாகுபாட்டின் விரிவுச் சூத்திரங்களையும் நாம் காணவேண்டும்.

அவற்றுள் ஓரறிவுடையன

புல்லும் மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

ஈரறிவுடையன

நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

மூவறிவுடையன

சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே